**<u>குற்றவியல் நீதிமன்றம் நடுவர் எண்.1, மேட்டூர்</u>**

**S.T.C.No. 1764/2019** **நாள்: 04.08.2022**

**ம.சா.2 மதன், த/பெ.சண்முகம், வங்கி மேலாளர்**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, மேட்டூர் கிளையில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். சந்தோஷ்குமார் எங்களது கிளையில் சேமிப்புக்கணக்கு வைத்துள்ளார். 20.07.2001 யில் இருந்து சேமிப்பு கணக்கு வைத்துள்ளார். 8.7.2019 தேதியிட்ட கரூர் வைஸ்யா வங்கியில் வரையப்பட்ட காசோலை எண். 165 காசோலை தொகை ரூ.2,00,000/-, 8.7.2019 தேதியிட்ட கரூர் வைஸ்யா வங்கியில் வரையப்பட்ட காசோலை எண். 147 காசோலை தொகை ரூ.1,50,000/-, 8.7.2019 தேதியிட்ட கரூர் வைஸ்யா வங்கியில் வரையப்பட்ட காசோலை எண். 149 காசோலை தொகை ரூ.2,00,000/-, 8.7.2019 தேதியிட்ட கரூர் வைஸ்யா வங்கியில் வரையப்பட்ட காசோலை எண். 168 காசோலை தொகை ரூ.2,00,000/-, 8.7.2019 தேதியிட்ட கரூர் வைஸ்யா வங்கியில் வரையப்பட்ட காசோலை எண். 182 காசோலை தொகை ரூ.4,00,000/-, மொத்த தொகை ரூ.11,50,000/- ஆகிய ஐந்து காசோலைகளையும் 10.07.2019 ந்தேதியன்று எங்கள் வங்கிக்கு வசூலுக்காக தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி அனைத்து காசோலைகளும் 10.07.2019 அன்றே அவர் வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்ற காரணத்தினால் திருப்பப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை –</u>**

என்ன ஆவணங்கள் கொண்டுவரவேண்டி நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வழங்கப்பட்டது என்றால் புகார்தாரர் சந்தோஷ்குமாரின் வங்கி கணக்கிற்குரிய வங்கி பரிவர்த்தனை ஆவணங்களை 2019 ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டுவரை தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டிருந்தது. மேற்படி காசோலைகளைப்பற்றி குறிப்பாணையில் சாட்சியமளிக்க குறிப்புக்கள் இல்லை என்றால் சரிதான். என்னிடம் தற்போது உள்ள 2019 ஆண்டு முதல் 2022

ஆண்டுவைரையிலான சந்தோஷ்குமாரின் பரிவர்த்தனை கணக்குகளை பார்வையிடும்போது எவ்வளவு வரவு செலவு பரிவர்த்தனை செய்துள்ளார் என்றால் அதிகபட்சமாக தொகை ரூ.20,000/-மும் குறைந்தபட்சமாக தொகை ரூ.1,500/- யும் வரவுசெலவு செய்யப்பட்டுள்ளது. புகார்தாரர் கணக்கில் வேறு நபர்கள் கொடுத்த காசோலை தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. புகார்தாரர் 2019 ஆண்டு முதல் 2022 வரை புகார்தாரர் வங்கி கணக்கில் இருந்து காசோலை வேறு நபர்களுக்கு வழங்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 10.07.2019 அன்று மொத்த தொகை ரூ.14,50,000/- ரூபாய்க்கு காசோலை திருப்பப்பட்டுள்ளது. 6 காசோலைகள் அன்றையதினம் வசூலுக்காக தாக்கல் செய்யப்பட்டிருந்தது. மேற்படி காசோலைகள் அல்லாமல் Federal Bank காசோலை எண். 14978 ரூ.3,00,000/- தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி காசோலை யாருடைய பெயரில் வரையப்பட்டுள்ளது என்பதை ஆவணங்களை பார்த்தால் தான் சொல்லமுடியும். இந்த காசோலை அல்லாமல் இதர 5 காசோலைகளின் மொத்த தொகை ரூ.11,50,000/-. 2019 ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை புகார்தாரரின் காசோலை எதுவும் திருப்பப்படவில்லை. புகார்தாரர் அனுப்பிய அழைப்பாணையில் காசோலைப்பற்றி சாட்சியமளிக்க குறிப்பிட்டுள்ளாரா என்றால் பொதுவாக 2019 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையிலான வங்கி கணக்கு பரிவர்த்தனை குறித்து ஆவணங்களை தாக்கல் செய்யுமாறு உத்தரவு செய்யப்பட்டுள்ளது.மேற்படி காசோலைகள் தாக்கல் செய்தது குறித்து குறிப்பாக சாட்சியமளிக்க அழைப்பாணையில் குறிப்பிடவில்லை என்றால் குறிப்பாக இல்லை. 2019 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையிலான வங்கி கணக்கு பரிவர்த்தனை கணக்குகளில் காசோலை திருப்பப்பட்ட விவரமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இரண்டு வழக்குகளில்

சாட்சியமளிக்க அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை –**

2019 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையிலான புகார்தாரரின் வங்கி கணக்கு ஆவணங்களிலேயே காசோலை தாக்கல் செய்யப்பட்ட விவரமும் திருப்பப்பட்ட விவரமும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**குறுக்கு விசாரணை –**

எத்தனை காசோலைகள் 10.7.2019 யில் திருப்பப்பட்டது என குறிப்பாணை எங்கள் வங்கியால் வழங்ககப்பட்டுள்ளது என்றால் 6 காசோலைகள் திருப்பப்பட்டது என குறிப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

**விசாரணை முடிக்கப்பட்டது.**

**ஒம்/–எ.கே.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**